| **2.** | M/s.Sagar Electronics, Pollachi | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **2.99%** அதிகம். |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **0.26%** குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/s.Syscon Systems, Coimbatore அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற

அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>:**

1. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் **0.26%** குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/s.Syscon Systems, Coimbatore அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மற்றும் பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.5432/2021/இ1

**3203)** பொள்ளாச்சி நகராட்சி **15**-வது நிதிக்குழு மான்யம் **Tied Grant 2021-22** நிதியின் கீழ் பொள்ளாச்சி நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணிக்கு நகராட்சியால் வழங்கப்படும் டிப்பர் கேபின் மற்றும் சேசிங்க்கு பாடி கட்டுதல் பணிக்கு ரூ.**8.37** இலட்சம் மதிப்பீட்டிற்கு **30.12.2021** ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.

| | | |
|---|---|---|
| 1. | **Vambsk Fabs (P) LTD, Coimbatore-25.** | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **0.11%** குறைவு. |
| 2. | **Sakthi Body Works, Chennai - 56.** | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **0.24%** அதிகம். |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **0.11%** குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் **Vambsk Fabs (P) LTD, Coimbatore** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>:**

1. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் **0.11%** குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் **Vambsk Fabs (P) LTD, Coimbatore** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மற்றும் பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.5433/2021/இ1**

**3204)** திருப்பூர் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்தில் பயன்பாட்டில் உள்ள **23** எண்ணம் கணிணிகள், **2** எண்ணம் பிரிண்டர்கள் மற்றும் வீடியோ கான்பரன்ஸ் சாதனங்களை பழுது ஏற்படாமல் பராமரிக்கவும், பழுது ஏற்பட்மல் உடன் சரி செய்திடவும், ஆண்டு பராமரிப்பினை மேற்கொள்ளவும், அதற்கான தொகையினை ஈடு செய்வதற்கு போதிய நிதி ஆதாரம் இல்லாததால், அதற்கான செலவினத்தை பொள்ளாச்சி நகராட்சியின் பொது நிதியிலிருந்து ஈடு செய்து கொள்ள, மண்டல இயக்குநர் அவர்கள் ந.க.எண்.**2825/2020/**பி**1-1**, நாள்.**22.11.2021** கடிதம் வாயிலாக கோரியுள்ளார். மேற்காண் **23** எண்ணம் கணிணிகள், **2** எண்ணம் பிரிண்டர்கள் மற்றும் வீடியோ கான்பரன்ஸ் சாதனங்களை ஆண்டு பராமரிப்பினை மேற்கொள்வதற்கும், இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.**2.10** இலட்சத்தினை நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும், மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

| | |
|---|---|
| | 1. மன்றம் அனுமதிக்லாம்.<br>2. இப்பணியினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்ற மேற்கொள்ளம் நடவடிக்கைகளுக்கு மன்றம் அனமதிக்கலாம். |
| **3205)** | பொள்ளாச்சி நகராட்சியில் வார்டு எண்.**36**-ல் அமைந்துள்ள மயானம் மிகவும் சேதம் அடைந்துள்ளதால் இதை சீரமைக்க **15th CFC Untied Grant** நிதியில் இருந்து பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடம் இருந்து அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே, இப்பணியை உடன் மேற்கொள்ள ஆணையர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணிமேற்கொள்ளவும் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு ஒப்புதல் வழங்கலாம்.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்காணும் பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட ரூ.**17.50** இலட்சம் மதிப்பீட்டுத் தொகையில் **15**-வது மத்திய நிதிக்குழு நிதியில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.6442/2021/இ1 |
| **3206)** | பொள்ளாச்சி நகராட்சி பொது நிதியின் கீழ் பொள்ளாச்சி நகராட்சி அலுவலகத்தின் அனைத்து பிரிவுகளின் பயன்பாட்டில் உள்ள கணினிகளுடன் இணைக்கப்பட்டுள்ள பிரிண்டர்கள் மற்றும் ஸ்கேனர்களுக்கான ஆண்டு பராமரிப்பு செய்தல் பணிக்கு **ரூ.4.80 இலட்சம்** மதிப்பீட்டிற்கு **08.12.2021** ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளைக் கொண்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்தது கீழ்கண்டவாறு.<br>**1.** M/s.Syscon Systems, Coimbatore. — மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **0.11%** குறைவு.<br>**2.** M/s.Sagar Electronics, Pollachi — மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **3.00%** அதிகம்.<br><br>வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **0.11%** குறைவானதாகவும் மற்றதை விட குறைவானதாகவும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/s.Syscon Systems, Coimbatore அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டபப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>1. மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி பெற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.<br>2. முதல் அழைப்பாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் **0.11%** குறைவானதாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் M/s.Syscon Systems, Coimbatore அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.<br>3. மேற்காண் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மற்றும் பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.6098/2021/இ1** |
| **3207)** | பொள்ளாச்சி நகராட்சியின் 6வது வார்டு சரோஜினி வீதியில் உள்ள ஆழ்துளை கிணற்றில் 10 ஆண்டுகளுக்கு முன் பொருத்தப்பட்டுள்ள ஒருமுனை 1.5 கு.தி மின்மோட்டார் |

| | |
|---|---|
| | பம்பு மிகவும் பழுதடைந்து, இயக்கத்திறன் குறைந்துள்ளது. மேலும் சரோஜினி வீதி, ராமலிங்கம் வீதி மற்றும் கண்ணகி வீதி பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள கிணற்றுநீர் விநியோகத்திற்கான குய்கள் சிதலமடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. இப்பகுதி பொதுமக்கள் குடிநீர் தவிர இதர பயன்பாட்டிற்கு கிணற்றுநீர் விநியோகமின்றி சிரமப்படுகின்றனர். எனவே புதிய மூம்முனை மின் மோட்டார் பம்பு அமைக்கவும், இப்பகுதியில் கிணற்றுநீர் விநியோகத்திற்கு PVC குழாய் அமைக்கவும், இதற்கான மதிப்பீடு ரூ.4.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. கிணற்றுநீர் பணியின் அவசர அவசியம் கருதி முன்அனுமதி பெற்ற மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.5585/2021/இ3** |
| **3208)** | பொள்ளாச்சி நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள 17 அரசு மற்றும் நகராட்சி பள்ளிக்கூடங்களில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை மேற்கொள்ள 01.12.2019 முதல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு துப்புரவு பணிகள் வெளியாட்கொணர்வு மூலம் 20 துப்புரவு பணியாளர்கள் மற்றும் 12 பெருக்குனர்களை கொண்டு நடைபெற்று வந்தது. மேற்படி ஒப்பந்தம் 01.12.2021 முதல் 31.12.2021 வரை நீட்டிப்பு செய்து பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்காண் பணியாளர்களின் ஒப்பந்த பணிக்காலம் 30.12.2021 உடன் முடிவடையவுள்ளது. தற்போது தமிழகம் முழுவதும் உள்ள உள்ளாட்சி அமைப்புகளில் வெளிக்கொணர்வு பணியாளர்களுக்கான புதிய அளவுகோல்கள் மற்றும் அடிப்படை ஊதிய விகிதம் திருத்தி அமைக்கப்பட உள்ளதால் புதிதாக ஒப்பந்தபுள்ளி கோர இயலாத நிலை உள்ளது. எனவே மேற்காண் 20 துப்புரவு பணியாளர்கள் மற்றும் 12 பெருக்குனர்கள் அளித்து வரும் திருவாளர் சதர்ன் சாலிட் வேஸ்ட்மேனேஜ்மெண்ட் சர்வீஸ் அவர்களின் ஒப்பந்தக்காலத்தினை மேலும் ஒரு மாத காலத்திற்கு (01.01.2022 முதல் 31.01.2022 வரை) நகராட்சி நிர்வாக நலன் கருதி பணிநீட்டிப்பு செய்திடவும் அதற்கான செலவினத்திற்கும் பொது சுகாதாரப் பிரிவின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு:-</u>**<br>1. பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி தற்போது திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை மேற்கொண்டு வரும் திருவாளர் சதர்ன் சாலிட் வேஸ்ட்மேனேஜ்மெண்ட் சர்வீஸ் நிறுவனத்திற்கு 01.01.2022 முதல் 31.01.2022 வரை ஒரு மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.எச்3/4627/2019** |
| **3209)** | பொள்ளாச்சி நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள 36 வார்டுகளில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை மேற்கொள்ள 01.12.2019 முதல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு துப்புரவு பணிகள் வெளியாட்கொணர்வு மூலம் 191 துப்புரவு பணியாளர்கள் கொண்டு நடைபெற்று வந்தது. மேற்படி ஒப்பந்தம் 01.12.2021 முதல் 31.12.2021 வரை நீட்டிப்பு செய்து பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்காண் பணியாளர்களின் ஒப்பந்த பணிக்காலம் 30.12.2021 உடன் முடிவடையவுள்ளது. தற்போது தமிழகம் முழுவதும் உள்ள உள்ளாட்சி அமைப்புகளில் வெளிக்கொணர்வு பணியாளர்களுக்கான புதிய அளவுகோல்கள் மற்றும் அடிப்படை ஊதிய விகிதம் திருத்தி அமைக்கப்பட உள்ளதால் புதிதாக ஒப்பந்தபுள்ளி கோர இயலாத நிலை உள்ளது. எனவே மேற்காண் 191 துப்புரவு பணியாளர்கள் அளித்து வரும் திருவாளர் சதர்ன் சாலிட் வேஸ்ட்மேனேஜ்மெண்ட் சர்வீஸ் அவர்களின் ஒப்பந்தக்காலத்தினை மேலும் ஒரு மாத காலத்திற்கு (01.01.2022 முதல் 31.01.2022 வரை) நகராட்சி நிர்வாக நலன் கருதி பணிநீட்டிப்பு செய்திடவும் அதற்கான செலவினத்திற்கும் பொது சுகாதாரப் பிரிவின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:-</u>**<br>1. பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி தற்போது திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை |

| | |
|---|---|
| | மேற்கொண்டு வரும் திருவாளர் சதர்ன் சாலிட் வேஸ்ட்மேனேஜ்மெண்ட் சர்வீஸ் நிறுவனத்திற்கு 01.01.2022 முதல் 31.01.2022 வரை ஒரு மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.எச்3/4627/2019** |
| **3210)** | பொள்ளாச்சி நகராட்சியில் உள்ள அரசு பள்ளிகள், பொது கழிப்பிடங்கள் மற்றும் நகராட்சி கட்டிடங்களில் கழிவு நீர் தொட்டி சுத்தம் செய்ய பொது சுகாதாரப்பிரிவு மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு M/s.சூர்யா செப்டிக் டேங்க் கிளீனர்ஸ் ஒப்பந்ததாரருக்கு (உரிமைதாரர்) பணி உத்திரவு வழுங்கப்பட்டு நகராட்சி கட்டிடங்கள் மற்றும் பள்ளிகளில் கழிவுநீர் தொட்டி சுத்தம் செய்யப்பட்டு வந்தது. தற்போது M/s.சூர்யா செப்டிக் டேங்க் கிளீனர்ஸ் ஒப்பந்ததாரர் திரு.மனோகரன் உடல்நலக் குறைவால் 20.10.2021 அன்று இறந்து விட்டதால் இவர் நகராட்சியுடன் மேற்கொண்ட ஒப்பந்தம் ரத்து ஆகின்றது. எனவே நகராட்சி கட்டிடங்கள் மற்றும் பள்ளிகளில் கழிவுநீர் தொட்டி சுத்தம் செய்யும் பணிக்கு புதிய ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்கான உத்தேச்செலவினம் ரூ.6,00,000/- த்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>**1.** மன்றம் அனுமதிக்கலாம். |
| **3211)** | பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட கோட்டாம்பட்டி வடக்கு விரிவு அபிவிருத்தித் திட்டத்தில் வரும் பழைய டவுன் சர்வே வார்டு எண்.பி, பிளாக் எண்.7, நகரளவு எண்.2/1-பாகம், புதிய நகரளவு புல எண்.2/2-பாகம்-0.80 ஏக்கர் பரப்பளவில் திருமதி.கீதாபரமேஸ்வரி, க/பெ.மயில்சாமி என்பவர் அரசாணைக்கு முன்னதாக அமைத்து அதில் வரும் மனைகளையும் விற்றுள்ளார். ஆகவே அரசாணை (நிலை) எண்-78 மற்றும் 172 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி ந.வ.4(3) துறை, நாள் 04.05.2017 மற்றும் 13.10.2017ன்படி நகர் ஊரமைப்புத் துறை, கோயம்புத்தூர் மண்டலம், அனுமதியற்ற மனைகள் மற்றும் மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் திட்டம், விற்பனை செய்யப்பட்ட மனைகள் வரன்முறைப் படுத்துவதற்கான (Sold Plot Frame Work) வடிவமைப்பு வரைபடத்திற்கு SPFW எண்.1073/2018, நாள்-11.07.2018ல் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், கோயம்புத்தூர் வரைபடத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அம்மனைப்பிரிவில் இதுவரை 5 மனைகள் வரன்முறைப்படுத்தி வளர்ச்சிக் கட்டணம் ரூ.2,12,364/- மற்றும் வரன்முறைக் கட்டணம் ரூ.50,984/- நகராட்சியால் வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும் அம்மனைப்பிரிவின் உரிமையாளர் திருமதி.கீதாபரமேஸ்வரி, க/பெ. மயில்சாமி என்பவர் Sold Plot Frame Work வடிவமைப்பு வரைபடத்தில் 23 அடி ரோடு காண்பிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் கடிதம் நாள்.05.11.2021ல் 30அடி ரோடு ஒப்படைப்பு செய்வதாக கடிதம் கொடுத்துள்ளார். ஆகவே அனுமதியற்ற மனைப்பிரிவில் வரும் 30 அடி சாலையினை ஏற்றுக் கொண்டு நகராட்சி பராமரிக்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், கோவை அவர்களுக்கு 23 அடி தடத்திற்கு பதிலாக 3 அடி தடமாக வடிவமைப்பு வரைபடத்தில் மாற்றித் தர தெரிவிக்கலாம்.<br>**ந.க.எண்.5379/2021/ஜி1** |
| **3212)** | திரு.வி.நந்தக்குமார், த/பெ.ஆர்.வேலுச்சாமி, கதவு எண்.A-30/33, நேரு வீதி, மகாலிங்கபுரம், பொள்ளாச்சி என்பவர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண்.W.P.No.25455/2021-ல் 1. அரசு செயலாளர், தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, சென்னை. 2. மாவட்ட ஆட்சியர், கோயம்புத்தூர் 3. இயக்குநர், நகர் ஊரமைப்பு இயக்குநர், அண்ணா சாலை, சென்னை மற்றும் 4. ஆணையாளர் (ம) உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்டக்குழுமம், பொள்ளாச்சி ஆகியோரின் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது.<br>எனவே மேற்படி வழக்கினை சென்னை உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞர் திரு.பி.ஆனந்த், மாவட்ட ஆட்சியர் மற்றும் நகராட்சி ஆணையாளர் சார்பாக வழக்கினை நடத்தவும், அதற்கு ஆகும் உத்தேச செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |

| | |
|---|---|
| | **அலுவலகக் குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.5921/2020/ஜி1** |
| **3213)** | பொள்ளாச்சி நகராட்சிக்குட்பட்ட 10 இடங்களில் கொரோனா தடுப்பூசி முகாம் 14.11.2021 அன்று நடைபெற்றது. தடுப்பூசி முகாமில் பணிபுரிந்த 80 பணியாளர்களுக்கு காலை சிற்றுண்டிக்காக ரூ.4500/– மதிய உணவுக்காக ரூ.4400/– மொத்தம் ரூ.8900/– திரு.சு.ஆறுமுகம், துப்புரவு ஆய்வாளரால் செலவு மேற்கொள்ளப்பட்டது. திரு.சு.ஆறுமுகம், துப்புரவு ஆய்வாளரால் மேற்கொள்ளப்பட்ட செலவுத் தொகையினை அன்னாருக்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண்.5901/2021/எச்1** |
| **3214)** | பொள்ளாச்சி நகராட்சியில் குடிநீர் விநியோகத்திற்கு தலைமை நீரேற்று நிலையம், நீர் உந்து நிலையம் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகங்களில் காவலர் பணியினை வெளியாட்கள் மூலம் **(Outsourcing)** முறையில் மேற்கொள்ள ரூ.22.60 இலட்சம் மதிப்பீட்டிற்கு 11.08.2021–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.<br>அதுசமயம் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்கள் மூலம் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் குடிநீர் பணி, பாதாள சாக்கடை பணி, சுகாதாரப்பணி மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு போன்ற பணிகளுக்கு Outsourcing முறையில் மேற்கொள்ள 30.07.2021–ம் தேதியன்று Video Confrence ஆய்வு கூட்டத்தில் இப்பணிகளுக்கு மேற்கொண்டு நடைமுறைப்படுத்த வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகள் பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும், அதன்பின் ஒப்பந்தப்புள்ளிகள் மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டது. அதன் அடிப்படையில் இப்பணிக்கு 11.08.2021–ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் யாவும் ரத்து செய்து நகரமன்ற தீர்மான எண்.3028 நாள்.31.08.2021–ல் மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது.<br>எனவே இப்பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் வைப்புத் தொகைகளை திரும்ப வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு.**<br>**1.** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2.** இப்பணிக்கு பெறப்பட்ட அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளையும் ரத்து செய்து ஒப்பந்தப்புள்ளிகளுக்கு செலுத்தப்பட்ட வைப்புத் தொகையை திரும்ப வழங்க மன்றம் அனுமதிக்கலாம். |
| **3215)** | பொள்ளாச்சி நகராட்சியில் பல்வேறு திட்டங்களின் கீழ் நடைபெறும் திட்டப்பணிகள், பாதாள சாக்கடை கழிவுநீர் குழாய் இணைப்பு வீடுகளுக்கு வழங்கும் பணிகள் மற்றும் பொதுப்பணிகள் நடைபெறுவதை கண்காணிக்க தனியார் மூலம் (Outsourcing) தொழில்நுட்ப பணியாளர்களை அமர்த்தும் பணிக்கு ரூ.**7.70** இலட்சம் மதிப்பீட்டு பணிக்கு 18.08.2021–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.<br>அதுசமயம் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் மூலம் மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் **Outsourcing** முறையில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு 30.07.2021–ல் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் Video Conference ஆய்வுக் கூட்டத்தில் வழிகாட்டு நெறிமுறைகள் பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் அதன்பின் ஒப்பந்தப்புள்ளிகள் மேற்கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>அதன் அடிப்படையில் இப்பணிக்கு 18.08.2021–ல் கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் நகரமன்ற தீர்மான எண்.3027, நாள்.31.08.2021–ல் நிலுவையில் வைக்கப்பட்டது.<br>தற்போது நிலுவையில் வைக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் நகராட்சி ஒப்பந்த விதிகளின் படி 90 நாட்கள் கடந்து காலாவதி ஆகிய நிலையில் உள்ளதால், இப்பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் வைப்புத் தொகைகளை திரும்ப வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>**1.** மன்றம் அனுமதிக்கலாம். |

| | |
|---|---|
| | 2. ஒப்பந்தப்புள்ளிகளில் காலம் கடந்துவிட்ட நிலையில் ஒப்பந்தப்புள்ளிகளை ரத்து செய்து, வைப்புத் தொகைகளை திரும்ப வழங்க மன்றம் அனுமதிக்கலாம். |
| 3216) | பொள்ளாச்சி நகருக்கு குடிநீர் விநியோகம் செய்ய நகரிலிருந்து 10 கி.மீ தூரத்தில் உள்ள அம்பராம்பாளையம் நீரேற்று நிலையத்தில், ஆழியாற்றிலிருந்து நீர் எடுக்கப்பட்டு பின் சுத்திகரிக்கப்பட்டு மின் மோட்டார்கள் மூலம் மூன்று குழாய் வழிதடங்கள் வாயிலாக குடிநீர் நீரேற்றம் செய்யப்பட்டு வருகிறது. மின் மோட்டார்கள் இயங்குவதற்கு மின்வாரியத்திலிருந்து இரு மின் வழி தங்கள் வாயிலாக, உயர்மின் அழுத்த மின் இணைப்பு (HT) பெறப்பட்டு, மின் மாற்றிகள் மூலம் தாழ்வழுத்த மின்சாரம் பெறுவதற்கான கட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளது. மின்தடை நேரங்களில் இரவில் பணியாளர்கள் பணியாற்றிடவும், மின்கட்டமைப்பில் ஏற்படும் மின் பழுதுகளை உடன் சீர் செய்வதற்கும் போதிய ஒளியின்றி உள்ளது. மேலும் பாம்பு மற்றும் விஷ பூச்சிகள் அதிகமாக உள்ளதால் பணியாளர்களின் போக்குவரத்திற்கு பாதுகாப்பின்றியும் உள்ளது. எனவே இரவில் மின்தடை நேரங்களில் பணியாளர்களின் பாதுகாப்பினை கருதியும், தடையின்றி பணி மேற்கொள்வதற்கும் **1KVA, UPS** ஒன்றும் மற்றும் **150W LED Flood Light** இரு எண்ணமும் அமைக்க வேண்டியுள்ளது. இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.65,000/−க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசியம் கருதி முன் அனமதி பெற்று மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு மன்றம் அனுமதிக்கலாம். |
| 3217) | நகராட்சிக்கு சொந்தமான காந்தி மார்க்கெட் 1 முதல் 12 பிரிவில் உள்ள நகர் மன்ற கடைகளிலும் மற்றும் காலியிடங்கலும் கடை வைத்து வியாபாரம் செய்யும் வியாபாரிகளிடம் சந்தை நாட்களில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 15.10.2018 முதல் 31.10.2021 வரை 3 ஆண்டு காலத்திற்கு திரு.அக்பர்அலி என்பவருக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது தற்போது 31.12.2020 முதல் 12 முறைக்கு மேல் ஏலம் /ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும் . ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோர யாரும் முன்வரவில்லை. தற்போது 31.10.2021ல் குத்தகை காலம் முடிவடைகிறது.<br>கோவிட் நோய் தொற்று காரணமாக சந்தையில் பல கடைகள் செயல்படாமல் உள்ளதால் 01.11.2021 முதல் துறை மூலம் வசூல் பணி மேற்கொள்ளும் பட்சம் குத்தகைதாரரால் செலுத்தப்படும் மாத தொகை ரூ .1,90,731/− ஆனது வசூல் செய்ய இயலாத சூழல் ஏற்படும் என்பதால் நகராட்சிக்கு நிதியிழப்பு ஏற்படும்.<br>நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாததாலும் குத்ததைதாரரா ல் செலுத்தப்பட்டு வரும் மாத குத்தகை தொகை ரூ .1,90,731/−ல் 5% உயர்வு செய்து குத்தகை தொகை ரூ .2,00,286/− ஆக நிர்ணயம் செய்து குத்தகைதாரர் திரு .அக்பர் அலி என்பவருக்கு நவம்பர் 2021 முதல் டிசம்பர் 2021 வரை உரிமம் நீட்டிப்பு செய்து வழங்கப்பட்டுள்ளது . தற்போது மேலும் ஜனவரி 2022 ஒரு மாத காலம் மட்டும் குத்தகை உரிமம் நீட்டிப்பு செய்து வழங்கிட சந்தை கண்காணிப்பாளரால் 28.12.2021ல் குறிப்பு வழங்கப்பட்டுள்ளதன் படி ஜனவரி 2022−ம் மாதத்திற்கு மட்டும் உரிமம் நீட்டிப்பு செய்து குத்தகை தொகை ரூ .2,00,286/−க்கு குத்தகைதாரர் திரு .அக்பர் அலி என்பவருக்கு வழங்கிட மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>**ந.க.எண்:5035/2020/அ6** |
| 3218) | நகராட்சிக்கு சொந்தமான காலியாக உள்ள கடைகளுக்கு மறு ஏலம்/மறு ஒப்பந்தப்புள்ளி 15.12.2021 – ல் நடைபெற்றதில் கீழ்கண்ட இனங்களுக்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br><br><table><tr><th>வ. எண்</th><th>கடையின் விபரம்</th><th>ஒப்பந்தப்பிள்ளி கேட்டுள்ளவரின் பெயர்</th><th>மாத வாடகை</th></tr></table> |

| | | /முகவரி | தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | காந்தி வாரச்சந்தை சில்லறை வியாபார கடை எண்.107 | திரு.கிருஷ்ணமூர்த்தி, 8, கல்யாண்ஜி மில் ரோடு, மார்க்கெட் ரோடு, பொள்ளாச்சி. | ரூ.4750/- |
| 2 | காந்தி வாரச்சந்தை சி பிளாக் பகுதியில் உள்ள நிரந்தர மற்ற மேற்கூரை கொண்ட கடை | திரு.அஸ்ரப் அலி, 72, மார்க்கெட் ரோடு, பொள்ளாச்சி. | ரூ.5525/- |

மேற்காண் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-**

1. வ.எண்.1–ல் குறிப்பிட்டுள்ள கடைக்கு நகர்மன்ற தீர்மானம் எண்.2835 நாள் .26.02.2021–ல் இக்கடைக்கு மாத வாடகை தொகையாக ரூ.4200/- ஆக நிர்ணயம் செய்யப்பட்டு சுமார் 20 முறைகள் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு யாரும் முன் வரவில்லை என்பதால் தற்போது திரு.கிருஷ்ணமூர்த்தி என்பவர் மாத வாடகை தொகை ரூ.4750/-க்க கேட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. வ.எண்.2–ல் குறிப்பிட்டுள்ள நிரந்தரமற்ற மேற்கூரை கொண்ட கடைக்கு இரண்டு முறை ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் யாரும் முன் வரவில்லை என்பதால் தற்போது திரு.அஸ்ரப் அலி என்பவர் மாத வாடகை தொகை ரூ.5525/-க்கு சமர்பித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்.1131/2020/அ6**

**3219)** நகராட்சிக்கு சொந்தமான உடுமலை சாலையில் உள்ள பழைய பெண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் பின்வரும் (அன்பு சில்க்ஸ்) கட்டுமானங்களை குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

| வ.எண் | குத்தகைதாரர் பெயர் | குத்தகைக்கு விடப்பட்ட கட்டிடத்தின் தரை மற்றும் முதல் தள சதுரடி (தனித்தனியாக) | மாதவாடகை தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | திரு.என்.ஆர்.திருமூர்த்தி | 4262 | 91,119 |
| 2 | திருமதி.விஜயபிரபா | 402 | 12,422 |

மேற்கண்ட மாதவாடகை தொகை நகர் மன்ற தீர்மானம் எண் 1422 நாள்:30.08.2013ல் ஏற்கப்பட்டு ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2016 வரை உரிமம் வழங்கப்பட்டு ஒவ்வொரு வருடமும் உரிமம் புதுப்பித்து கொள்ள உத்திரவிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை கோவை அவர்களின் 24.04.2015ம் நாளிட்ட கடிதத்தின் படி மேற்படி உரிம இனங்கள் தொடர்பான குத்தகை கோப்புகள் மற்றும் பதிவேடுகள் கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து குத்தகைதாரர் திரு.N.R.திருமூர்த்தி என்பவர் குத்தகைக்கு விடப்பட்ட தரை மற்றும் முதல் தள கட்டிடத்தின் ஒதுக்கீடு செய்யப்பட்ட 4262 சதுரடி பரப்பளவு கட்டிடத்தில் 1280 சதுரடி தரை மற்றும் முதல் தளம் (தனித்தனியாக) நகராட்சியின் அனுமதியின்றி பயன்படுத்தியதை கண்டறிந்து தரைத்தளத்திற்கு ரூ.92,027/– முதல் தளத்திற்கு ரூ.90,161/– மொத்தம் ரூ.1,82,188/– மாத வாடகையாக மறுநிர்ணயம் செய்யப்பட்டு வாடகை தொகை செலுத்திட தெரிவித்து அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டது. மேற்படி வாடகை உயர்வுக்கு நகர் மன்ற தலைவரின்

| | |
|---|---|
| | முன்அனுமதி மட்டும் பெறப்பட்டுள்ளது தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை. இவ்வாடகை உயர்வினை ஏற்றுக்கொண்டு குத்தகைதாரர் வாடகை தொகையினை செலுத்தி வந்துள்ளார்.<br><br>மேற்கண்ட பட்டியலில் வ.எண். 2ல் கண்டுள்ள திருமதி.விஜயபிரபா என்பவருக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ள 402 சதுரடி பரப்பளவு கொண்ட தரை மற்றும் முதல் தள கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை.<br><br>கோவை லஞ்ச ஒழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு கண்காணிப்பு துறையின் கோரிக்கைக்கு இனங்க மேற்படி கட்டுமானங்களை மீண்டும் அளவீடு செய்து தரைத்தளத்தில் உள்ள காலியிடத்தில் அமைந்துள்ள கழிப்பிடம், ஜெனரேட்டர் வைக்கப்பட்டுள்ள இடம், ஸ்விட்ச் ரூம், மற்றும் காலியிடத்தினை அளந்து அதனை சேர்த்து பரப்பளவு கணக்கீடு செய்து நகராட்சி பொறியரால் தரைத்தளத்திற்கு ரூ.1,35,818/- மற்றும் முதல் தளத்திற்கு ரூ.1,33,952/- மொத்தம் ரூ.2,69,770/- மாத வாடகையாக கணக்கீடு செய்து 07.10.2015ல் குறிப்பு வழங்கப்பட்டதன் படி வாடகை மறு நிர்ணயம் செய்வதற்கு மன்றப் பொருள் தயார் செய்யப்பட்டு தீர்மானம் ஒப்புதல் பெறப்படவில்லை.<br><br>நகராட்சியில் குத்தகைக்கு விடப்பட்ட அளவை விட கூடுதலாக பயன்படுத்தி குத்தகை விதிகளை மீறியுள்ளதால் மறுநிர்ணயம் செய்யப்பபட்ட வாடகை தொகை ரூ.2,69,770/- கேட்பாக செப்டம்பர் 2013 முதல் நிர்ணயம் செய்து அன்னார் செலுத்தியுள்ள வைப்புத்தொகையில் இருந்து வாடகை வித்தியாச தொகையினை ஈடு செய்து குத்தகை உரிமத்தினை ரத்து செய்வதற்கு மன்றத்தின் ஒப்புதல் எதிர்நோக்கி இருந்துள்ளது.<br><br>இந்நிலையில் குத்தகை விதிகளை மீறி அனுமதிக்கப்பட்ட கட்டிடத்தின் அளவை விட கூடுதலாக 1280 சதுரடி தரை மற்றும் முதல் தளத்தில் (தனித்தனியாக) நகராட்சி அனுமதியின்றி பயன்படுத்தியதால் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 8453/2016/ஆர்2 நாள் 06.04.2016 மேற்படி குத்தகையினை ரத்து செய்து இழப்பினை ஈடு செய்து மறு ஏலம் விட நடவடிக்கை மேற்கொள்ள தெரிவித்து உத்திரவிடப்பட்டுள்ளது.<br><br>இந்நிலையில் நகராட்சியின் மூலம் 12.04.2016ல் குத்தகை உரிமம் ரத்து செய்து குத்தகைக்கு விடப்பட்டுள்ள கட்டிடத்தினை 15 தினங்களுக்குள் ஒப்படைக்க தெரிவிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து குத்தகைதாரர் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் வழக்கு wp எண்:14522/2016ல் தொடரப்பட்டு 27.04.2016ல் பின்வருமாறு தீர்புரை வழங்கப்பட்டுள்ளது.<br><br>மேற்காண் பொருள் குறித்து மதிப்பிற்குரிய நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்கள் 3 மாத காலத்திற்குள் முழு அளவில் விசாரணை மேற்கொள்ளவும், விசாரணை முடியும் வரையில் மாத வாடகை தொகை ரூ.1,82,119 மற்றும் இதர கட்டணங்கள் செலுத்திட தெரிவித்து உத்திரவிடப்பட்டுள்ளது.<br><br>இந்நிலையில் ஏல சிறப்பு கட்டுப்பாடுகள்/குத்தகை விதிகளின் படி வாடகை தொகை செலுத்தாததால் நகராட்சிக்கு தொடர் இழப்பு ஏற்படுத்தி உள்ள தொகையினை அவரது பொறுத்தொகையில் இருந்து சரிகட்டியும், நகராட்சிக்கு இழப்பு ஏற்படும் சூழ்நிலை வந்ததாலும், பல முறை அறிவிப்பு கடிதங்கள் வழங்கியும், நேரில் அறிவுறுத்தியும், வாடகை தொகை செலுத்தாமல் நகராட்சிக்கு இழப்பு ஏற்படுத்தியுள்ளார்.<br><br>எனவே இந்நகர் மன்ற தீர்மானம் எண்.2912 நாள்:30.06.2021ன் படி குத்தகைக்கு விடப்பட்ட நகராட்சி பழைய பெண்கள் மேல்நிலை பள்ளி கட்டிடங்களுக்கு குத்தகை விதிகளை மீறி நகராட்சிக்கு இழப்பு ஏற்படுத்தியதால் நகராட்சி நிர்வாக நலன் கருதி 01.06.2021ல் கட்டிடத்தில் உள்ள அனைத்து பொருள்களுடன் சேர்த்து குத்தகைதாரால் பூட்டப்பட்டு இருந்த கட்டிடத்தில் மேல் பூட்டு பூட்டி சீல் வைக்கப்பட்டு 01.06.2021 முதல் குத்தகை உரிமம் ரத்து செய்யப்பட்டுள்ளது. |

இந்நிலையில் பின்வருமாறு வாடகை நிர்ணயம் குறித்து தெளிவுரை வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு 08.09.2021ல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

| வ.எண் | வரிவிதிப்பு எண் / குத்தகைதாரர் பெயர் | குத்தகை காலம் | குத்தகைக்கு விடப்பட்டுள்ள வாடகை தொகை | முதல் முறை மறு நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை தொகை ரூ. | இரண்டாம் முறை மறுநிர்ணயம் செய்யப்பட்ட வாடகை தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | 076/13006<br>திரு.என்ஆர் திருமூர்த்தி | 9/2013 முதல் 3/2016 வரை | 91,199/- | 1,82,188/- | 2,69,770/- |
| 2 | 076/13007<br>திருமதி விஜயபிரபா | | 12,422/- | எழவில்லை | எழவில்லை |

**<u>சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின்படி தெரிவிக்கப்பட்ட வாடகை தொகை ரூ.1,82,188/- ல் அரசாணை எண் 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 03.07.2007ன்படி வாடகை தொகையில் 15% உயர்வு செய்த கணக்கீட்டு விபரம்</u>**

**<u>கணக்கீடு எண் 1</u>**

| வரிவிரிப்பு எண்:076/13006 | காலம் | மாத வாடகை ரூ. |
|---|---|---|
| முதல் முறை நிர்ணயம் வாடகை (15% உயர்வு - உரிமம் ரத்து செய்யப்படும் காலம் வரையில்) | 1.09.2013 - 31.08.2016 | 1,82,188/- |
| | 1.09.2016 - 31.08.2019 | 2,09,516/- |
| | 01.09.2019 - 31.05.2021 | 2,40,943/- |

**<u>கோவை லஞ்ச ஒழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு கண்காணிப்பு துறையால் தெரிவிக்கப்பட்டதன்படி நகராட்சி பொறியாளர் வாடகை மறு நிர்ணயம் செய்த தொகை ரூ.2,69,770/- ல் அரசாணை எண் 92 நாள் 03.07.2007 ன்படி வாடகை தொகையில் உயர்வு செய்து கணக்குச்சீட்டு விபரம்</u>**

**<u>கணக்கீடு எண் 2</u>**

| வரிவிரிப்பு எண்:076/13006 | காலம் | மாத வாடகை ரூ. |
|---|---|---|
| இரண்டாம் முறை நிர்ணயம் (15% உயர்வு - உரிமம் ரத்து செய்யப்படும் காலம் வரையில்) | 1.09.2013 - 31.08.2016 | 2,69,770/- |
| | 1.09.2016 - 31.08.2019 | 3,10,236/- |
| | 1.09.2019 - 31.05.2021 | 3,56,771/- |

நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 5453/2021/ஆர்2 நாள் 17.12.2021 ல் திரு.என்.ஆர்.திருமூர்த்தி நீதிபேரணை மனு எண் 14522/2016 நீதிமன்ற உத்தரவு நாள் 27.04.2016ன் படியும் ,கோவை கண்காணிப்பு மற்றும் ஊழல் தடுப்பு துறையில் தெரிவித்துள்ளதன்படி காலியிடத்தினையும் சேர்த்து பரப்பளவு கணக்கிட்டு மறு அளவீடு செய்ததன்படி தரை தளத்திற்கு மாதம் ஒன்றுக்கு ரூ.1,35,818/- எனவும் முதல் தளத்திற்கு ரூ.1,33,952/- எனவும் மொத்தம் ரூ.2,69,770/- மாத வாடகையாக நிர்ணயம் செய்து உரிய விதிகளின்படி நகர்மன்ற ஒப்புதல் / பின்னேற்பு பெற்று அதற்குரிய நிலுவைத்தொகையினை குத்தகைதாரரிடமிருந்து நகராட்சிக்கு நிதியிழப்பில்லாமல் வசூல் செய்யவும் குத்தகை விதிகளை பின்பற்றி உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அ) வரிவிதிப்பு எண் 076/13006

குத்தகைதாரர் பெயர் திரு.என்.ஆர்.திருமூர்த்தி

| வ.எண் | காலம் | | அரசாணையின்படி மூன்று ஆண்டு முடிவுற்றவுடன் 15% உயர்வு செய்து நிர்ணயம் செய்யப்படும் மாத வாடகை தொகை ரூ. |
|---|---|---|---|
| | முதல் | முடிய | |
| 1) | 01.09.2013 | 31.08.2016 | 2,69,770/- |
| 2) | 01.09.2016 | 31.08.2019 | 3,10,236/- |
| 3) | 01.09.2019 | 31.05.2021 | 3,56,771/- |

ஆ) வரிவிதிப்பு எண் 076/13007

குத்தகைதாரர் பெயர் திருமதி விஜயபிரபா

| வ.எண் | காலம் | | அரசாணையின்படி மூன்று ஆண்டு முடிவுற்றவுடன் 15% உயர்வு செய்து நிர்ணயம் செய்யப்படும் மாத வாடகை தொகை ரூ. |
|---|---|---|---|
| | முதல் | முடிய | |
| 1) | 01.09.2013 | 31.08.2016 | 12,422/- |
| 2) | 01.09.2016 | 31.08.2019 | 14,285/- |
| 3) | 01.09.2019 | 31.05.2021 | 16,428/- |

மேற்காண் அட்டவனையில் குறிப்பிட்டுள்ளதன்படி நகராட்சி நிர்வாக இயக்குநரகம் சென்னை அவர்களின் தெளிவுரையயின்படியும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 92 நாள் 03.07.2007ன்படி நகராட்சிக் கடைகள் ஒரே நேரத்தில் மூன்றாண்டு காலத்திற்கும் குத்தகைக்கு விடப்படலாம் மூன்று ஆண்டுகளைக் கொண்ட ஒரு தொகுப்புக் கால அளவு முடிவடைந்ததன் பேரில், அக்குத்தகை தன்னியல்பாகவே (automatically) புதுப்பிக்கப்படும். இவ்வாறாக 9 ஆண்டுகளில் ஒவ்வொரு மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை குத்தகைத் தொகை 15 சதவீதம் உயர்வு செய்து குத்தகை உரிமம் 31.05.2021ல் ரத்து செய்யப்படும் காலம் வரையில் குத்தகைதாரரால் செலுத்தப்பட்ட வாடகை தொகையினை கழித்து கீழ்கண்டவாறு மீதம் செலுத்தப்படவேண்டிய வித்தியாச வாடகை மற்றும் இதர தொகையின் விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

| வ எண் | வரிவிதிப்பு எண்/குத்தகை தாரர் பெயர் | காலம் | | நிர்ணயம் செய்யப் பட்ட வாடகை | செலுத்தப் பட்ட வாடகை | மீதம் செலுத்தப் படவேண்டிய வாடகை | சரக்கு (ம) சேவை வரி தொகை | மொத்தம் செலுத்தப்படவேண்டிய வாடகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | முதல் | முடிய | | | | | |
| 1) | 076/13006 திரு என்.ஆர்.திருமூர்த்தி | 01.09.2013 | 31.08.2016 | 97,11,720 | 65,58,768 | 31,52,952 | 5,67,531 | 37,20,483 |
| | | 01.09.2016 | 31.08.2019 | 1,11,68,496 | 65,58,768 | 46,09,728 | 8,29,751 | 54,39,479 |
| | | 01.09.2019 | 31.05.2021 | 74,92,191 | 38,25,948 | 36,66,243 | 6,59,924 | 43,26,167 |
| | | மின் கட்டணம் | | | | | | 11,542/- |
| | | தொழில்வரி | | | | | | 3,750/- |
| | | வாடகை தொகை செலுத்தப்படாததற்கான அபராதம் | | | | | | 5,97,571/- |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | மொத்தம் | | | | | | 1,40,98,992/- |
| வஎண் | வரிவிதிப்பு எண்/குத்தகைதாரர் பெயர் | காலம் | | நிர்ணயம் செய்யப் பட்ட வாடகை | செலுத்தப் பட்ட வாடகை | மீதம் செலுத்தப்படவேண்டிய வாடகை | சரக்கு (ம) சேவை வரி தொகை | மொத்தம் செலுத்தப்படவேண்டிய வாடகை |
| | | முதல் | முடிய | | | | | |
| 2) | 076/13007 திருமதி விஜயபிரபா | 01.09.2013 | 31.08.2016 | 4,47,192 | 4,47,192 | 0 | 0 | 0 |
| | | 01.09.2016 | 31.08.2019 | 5,14,260 | 4,47,192 | 67,068 | 12,072 | 79,140 |
| | | 01.09.2019 | 31.05.2021 | 3,44,988 | 2,60,862 | 84,126 | 15,143 | 99,269 |
| | | மின் கட்டணம் | | | | | | 483/- |
| | | தொழில்வரி | | | | | | 3,750/- |
| | | வாடகை தொகை செலுத்தப்படாததற்கான அபராதம் | | | | | | 8,730/- |
| | | **மொத்தம்** | | | | | | 1,91,372/- |

மேற்காண் வரிவிதிப்பு எண் 076/13006ல் 01.09.2013 முதல் மாத கேட்பாக ரூ,2,69,760/- ஆக நிர்ணயம் செய்தும் குத்தகைக்கு விடப்பட்ட இவ்விரு கட்டிடங்களுக்கும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 92 நாள் 03.07.2007ன்படி நகராட்சிக் கடைகள் ஒரே நேரத்தில் மூன்றாண்டு காலத்திற்கும் குத்தகைக்கு விடப்படலாம் மூன்று ஆண்டுகளைக் கொண்ட ஒரு தொகுப்புக் கால அளவு முடிவடைந்ததன் பேரில், அக்குத்தகை தன்னியல்பாகவே (automatically) புதுப்பிக்கப்படும். இவ்வாறாக இக்குத்தகை இனங்களுக்கு 9 ஆண்டுகளில் ஒவ்வொரு மூன்றாண்டுகளுக்கு 15% வாடகை உயர்வு செய்து குத்தகை உரிமம் 31.05.2021 ரத்து செய்யும் காலம் வரையில் மறு நிர்ணயம் செய்யப்பட்ட வாடகையின் நிலுவை தொகை மற்றும் இதர கட்டணங்கள் குத்தகைதாரரிடமிருந்து விதிகளின் படி வசூல் செய்திட நடவடிக்கை மேற்கொள்ள மன்ற ஒப்புதல்/ பின்னேற்பு வேண்டி மன்றத்தில் வைக்கப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) குத்தகைதாரரால் தொகை செலுத்திட தவறும் பட்சம் குத்தகை விதிகளின்படியும் சட்டத்திற்குட்பட்டு கட்டிடத்தில் உள்ள பொருள்களை கையகப்படுத்தி ஏலம்விட்டு நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய தொகையினை ஈடு செய்யது மீண்டும் நிலுவை இருப்பின் மாண்புமை நீதிமன்றம் மூலம் வழக்கு தொடர்ந்தும் ஈடு செய்யலாம்.

**ந.க.எண் 2372/2021/அ6**

**3220)** நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்காணும் ஆண்டுக் குத்தகை இனங்களின் மூன்றாண்டு குத்தகை காலம் 31.03.2022 உடன் முடிவடைகிறது.

| வ.எண் | குத்தகை இனம் |
|---|---|
| 1 | காந்தி வாரச்சந்தையில் உள்ள சர்வே வார்டு எண்.3 பிளாக் எண்.2 சர்வே எண்.10/1 பாகத்தில் அடங்கிய வரையறுக்கப்பட்ட காலி இடத்தில் (13 மற்றும் 14 பிரிவுகள்) பழைய இரும்பு பொருள்கள், சாக்குகள் மற்றும் வெல்லம் வியாபாரம் செய்வோரிடம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் (வருடம் 1-க்கு) |
| 2 | வெங்கடேசா காலனி மேல்நிலைக் குடிநீர் தேக்கத் தொட்டி வளாகத்திற்குக் கிழக்கே உள்ள தமிழ் தென்றல் திரு.வி.க. தினசரி காய்கறி வியாபாரச் சந்தையில் |

| | |
|---|---|
| | உள்ள 50 சென்ட் இடத்தில் நகராட்சி யின் மூலம் கட்டப்பட்டுள்ள கடைகளில் வியாபாரம் செய்வோரிடம் கட்டணம் வசூல் செய்துகொள்ளும் உரிமம் மற்றும் நுழைவாயில்களில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.(வருடம் 1–க்கு) |
| 3 | லாரிப்பேட்டை நுழைவு வாயில் சங்க வசூல் மற்றும் அங்குள்ள 10 கடைகளில் வியாபாரம் செய்யும் வியாபாரிகளிடம் நாள் தோறும் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். |

மேற்காண் ஆண்டுக் குத்தகை இனங்களுக்கு ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினசரி செய்தித்தாளில் வெளியிடவும் அதற்கான அனைத்து செலவினங்கள் மேற்கொள்ள மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.5035/2020/அ6**

**3221)** நகராட்சிக்கு சொந்தமான ஆண்டு குத்தகை இனங்களுக்கு மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 28.12.2021–ல் நடைபெற்றதில் கீழ்க்கண்ட இனங்களுக்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | குத்தகை இனம் | பெயர்/முகவரி | ஆண்டுக் குத்தகை தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | காந்தி வாரச்சந்தையில் உள்ள 1 முதல் 12 பிரிவுகளில் உள்ள நகர்மன்ற கடைகளிலும் மற்றும் காலியிடங்களிலும் கடை வைத்து வியாபாரம் செய்யும் வியாபாரிகளிடம் சந்தை நாட்களில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | திரு.எம்.சத்யன், 15CB,ராமகிருஷ்ணாசாமி லேஅவுட், பல்லடம் சாலை, பொள்ளாச்சி | ரூ.19,50,009/– |
| | | திருமதி.S.ஆயிஷா பேகம், 4, கே.எஸ்.வி.லேஅவுட், பொள்ளாச்சி | ரூ.23,00,011/– |
| | | திரு.பி.அரவிந்த் வசந்த் ராம், 17/6, ஏ.எஸ்.டி. புரம், பொள்ளாச்சி. | ரூ.21,10,009/– (வைப்புத் தொகை செலுத்தப் படவில்லை) |
| 2 | அண்ணா மத்திய பேருந்து நிலையத்திற்குள் உள்ள பொருள் பாதுகாப்பு அறையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | திரு.B.ரமேஷ், த/பெ.வி.பாலசுப்ரமணியம், 2/106, கலைஞர் நகர், புளியம்பட்டி, பொள்ளாச்சி. | ரூ.57,600/– |

மேற்காண் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. வ.எண்.1–ல் குறிப்பிட்டுள்ள குத்தகை இனத்திற்கு சுமார் 14 முறை ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும் ஏலம் கோர யாரும் முன்வரவில்லை தற்போது வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.பி.அரவிந்த் வசந்த் ராம் என்பவர் வைப்புத் தொகை செலுத்தாமல் ஒப்பந்தப்புள்ளி மட்டும் சமர்ப்பித்துள்ளதால் அன்னாரின் ஒப்பந்தப்புள்ளியினை நிராகரித்தும் கடந்த ஆண்டு குத்தகை தொகை ரூ.22,88,772/–ஐ விட ரூ.11,239/– கூடுதலாகவும்

திரு.எம்.சத்யன் என்பவர் கேட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.19,50,009/- ஐ விட ரூ.3,50,002/- கூடுதலாக திருமதி.எஸ்.ஆயிஷா பேகம் என்பவர் கேட்டுள்ள ரூ.23,00,011/-க்கான உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

2. வ.எண்.2-ல் குறிப்பிட்டுள்ள குத்தகை இனத்திற்கு 26.02.2020 முதல் சுமார் 18 முறைகள் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும் கொரோனா நோய் தொற்று காலத்தில் பேருந்துகள் சரிவர இயங்காத காரணத்தாலும் பயணிகள் வராத காரணத்தாலும் ஏலம் கோர யாரும் முன்வரவில்லை. கடந்தாண்டு குத்தகை தொகை ரூ.56,892/-ஐ விட கூடுதலாக தற்போது திரு.பி.ரமேஷ் என்பவர் ஆண்டு குத்தகை தொகை ரூ.57,600/- சமர்ப்பித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்.5035/2020/அ6**

**3222)** நகராட்சிக்கு சொந்தமான கடைகளுக்கு மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 28.12.2021-ல் நடைபெற்றதில் கீழ்க்கண்ட கடைகளுக்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | கடையின் விபரம் | பெயர்/முகவரி | மாத வாடகை ரூ. |
|---|---|---|---|
| 1 | அண்ணா கூடுதல் பேருந்து நிலையம் முதல் தள கடை எண்.13 | திருமதி.பிரியா,<br>104/98, திருநீலகண்டர் வீதி,<br>பொள்ளாச்சி | ரூ.1900/- |
| 2 | காந்தி மார்கெட் சில்லறை வியாபார கடை எண்.82 | திருமதி.சாந்தி பிளாரன்ஸ் ஜெயராஜ் ,<br>1/106, வஞ்சியாபுரம்,<br>ஜமீன் கோட்டாம்பட்டி,<br>பொள்ளாச்சி. | ரூ.4500/- |

மேற்காண் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. வ.எண்.1-ல் குறிப்பிட்டுள்ள கடையானது 2012-ம் ஆண்டு முதல் சுமார் 35 முறைக்கு மேல் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும் ஏலம் கோர முன்வரவில்லை இப்பகுதியில் ஏலம் விடப்பட்டுள்ள கடைகளின் சராசரி வாடகை தொகை ரூ.1750/- ஆகும் என்பதால் தற்போது இக்கடைக்கு மாத வாடகை தொகை ரூ.1900/-க்கு வரப்பெற்ற திருமதி.பிரியா என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. வ.எண்.2-ல் குறிப்பிட்டுள்ள கடையானது 2017-ம் ஆண்டு முதல் சுமார் 35 முறைக்கு மேல் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும் ஏலம் கோர யாரும் முன்வரவில்லை இக்கடைக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வாடகை தொகை ரூ.4200/-ஐ விட கூடுதலாக மாத வாடகை தொகை ரூ.4500/-க்கு வரப்பெற்றுள்ள திருமதி.சாந்தி பிளாரன்ஸ் ஜெயராஜ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்.1131/2020/அ6**

**3223)** பொள்ளாச்சி நகராட்சி பொறியியல் பிரிவில் நடைபெற்று வரும் திட்டப்பணிகளை பொது மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் மாவட்ட ஆட்சியர் அவர்களின் பரிந்துரையை ஏற்று அவ்வப்பொழுது தினசரி நாளிதழில் விளம்பரம் செய்ய வேண்டியுள்ளது. மேலும், நகராட்சியில் நடைபெறும் திட்டப்பணிகள் மற்றும் பொதுநிதியில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு மாவட்ட அளவிலும் மற்றும் மாநில அளவிலும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரும் அறிவிப்பை நாளிதழ்களில் அவ்வப்பொழுது விளம்பரம் பிரசுரம் செய்ய வேண்டியுள்ளது. ஒவ்வொரு முறையும் விளம்பர நிறுவனங்களிடமிருந்து பட்டியல் பெற்று பின்னர் மன்ற அனுமதி பெற்று தொகைகளை வழங்க காலதாமதம் ஏற்படுகிறது.

எனவே பொள்ளாச்சி நகராட்சி பொறியியல் பிரிவில் மேற்கொள்ளப்படும் திட்டப்பணிகள் மற்றும் பொதுப்பணிகளை மேற்கொள்ள அனைத்து விளம்பரங்களையும் தினசரி நாளிதழ்களில் விளம்பரம் பிரசுரம் செய்யவும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை அவ்வப்பொழுது பிரசுரம் செய்ய ஆகும்

| | |
|---|---|
| | உத்தேச செலவினம் ரூ.9.00.000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு:</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்காண் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம். |
| | |